FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313283

1. District : சிவகங்கை PS: உளவுத் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு Year: 2026 FIR No.: 14/2026 Date: 01.10.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: as amended by the P.C. (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 29.09.2025 Date to : 13.00 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 30.09.2025 Time to : 12.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 01.10.2026 Time : 08.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 01.10.2026 Time : 09.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் நிரந்தரம் நிர்வாக அலுவலகம், மாடசாமி கோவில் தெரு, திருப்புவனம் பட்டம், சிவகங்கை மாவட்டம். சுமார் 30 கி.மீ தென்மேற்கு

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. மதன் மோகன் (b) Father's/ Husband's Name : பொன்னுச்சாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 52/2026. (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address :
தொழில் Dhanushree Packaged Drinking water Company, மானேஜர் முகவரி க.எண்: 127, M.V. அம்பிகை நகர் 4வது தெரு, கோமதிபுரம், மதுரை-30.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி. சாந்தி, நிரந்தரம் நிர்வாக அலுவலர், மாடசாமி கோவில் தெரு, திருப்புவனம் பட்டம், சிவகங்கை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- காலதாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 01.10.2026 தேதி காலை 08.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது மதுரை மாவட்டம், கோமதிபுரம், M.V. அம்பிகை நகர் 8வது தெரு, க.எண்.127 என்ற முகவரியில் வசிக்கும் பொன்னுச்சாமி என்பவரின் மகன் திரு.P.மதன்மோகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், லாடனேந்தல் குரூப் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.சுந்தரி என்பவரைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு, அவரின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று, 01.10.2026ம் தேதி காலை 09.00 மணிக்கு

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

01/10/2026

A. Kannan
DNRNet

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 01/10/2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01.10.2026 at 09.45 hrs

Name: பெயர் (A. KANNAN)
Rank: நிலை Inspector of Police, No. எண்
VAAC, Sivagangai.

சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண். 14/2026 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 14/2026 u/s.7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர், P.மதன்மோகன், த/பெ.பொன்னுச்சாமி, க.எண்.127, M.V.அம்பிகை நகர் 8வது தெரு, கோமதிபுரம், மதுரை-20, பெறுநர், திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை, ஐயா, நான் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் தாலுகா, லாடனேந்தல் கிராமத்தில் DHANUSHREE Packaged Drinking Water என்ற பெயரில் தொழில் செய்து வருகிறேன். எனது தகப்பனார் திரு.பொன்னுச்சாமி அவர்கள் கடந்த 04.02.2009ம் தேதி திரு.பிச்சை அவர்களின் வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கி அவரது அனுபவத்தில் வைத்திருந்த திருப்புவனம் வட்டம், லாடனேந்தல் குரூப் சர்வே எண்.எண்.35/5A4-ல் உள்ள 12 ½ செண்ட் நிலத்தையும், 07.02.2009ம் தேதி திரு.தியாகராஜன் அவர்களின் வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கி அவரது அனுபவத்தில் வைத்திருந்த திருப்புவனம் வட்டம், லாடனேந்தல் குரூப் சர்வே எண். 35/5A1-ல் உள்ள 5 ½ செண்ட் இடமும், சர்வே எண்.35/5A2-ல் உள்ள 11 செண்ட் இடமும், சர்வே எண்.35/5A3-ல் உள்ள 11 செண்ட் இடமும் சேர்த்து மொத்தம் 40 செண்ட் புன்செய் இடத்தினை கடந்த 08.09.2026ம் தேதி திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.5489/2026-ன்படி எனது பெயருக்கு செட்டில்மெண்டு பத்திரம் பதிவு செய்து கொடுத்தார். அதேபோல, எனது தந்தை கடந்த 02.06.2006ம் தேதி திரு.ராசுசேர்வை அவர்களின் வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கி, அவரது அனுபவத்தில் இருந்து வந்த, திருப்புவனம் வட்டம், லாடனேந்தல் குரூப் சர்வே எண்.35/3A3-ல் உள்ள 30 செண்ட் புன்செய் இடத்தினை கடந்த 08.09.2026ம் தேதி திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.5490/2026-ன்படி எனது பெயருக்கு செட்டில்மெண்டு பத்திரம் பதிவு செய்து கொடுத்தார். மேற்படி 2 செட்டில்மெண்டு பத்திர பதிவுகளின்படி, பட்டாமாறுதலுக்காக வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதற்கான விண்ணப்ப எண்.2026/0103/23/027174-க்கு ஒப்புகை சீட்டு எண்.TNIGRS/2026/Rural/53746088/08092026191949 மற்றும் விண்ணப்ப எண்.2026/0105/23/024716-க்கு ஒப்புகை சீட்டு எண். TNIGRS/2026/Rural/53744348/08092026185517 ஆகியவற்றை திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து எனக்கு வழங்கினார்கள். கடந்த 11.09.2026ம் தேதி திருப்புவனம் புதூரில் வைத்து லாடனேந்தல் கிராம உதவியாளர் திரு.தண்ணாயிரமூர்த்தி என்பவரிடம்

மேற்படி பட்டா மாறுதல் தொடர்பான ஆவணங்களின் நகல்களை கொடுத்தேன். அவர் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.சுந்தரியிடம் கொடுத்துவிடுவதாக தெரிவித்தார். அதன்பின்னர் நான் கடந்த 28.09.2026ம் தேதி online-ல் மேற்படி இரண்டு பட்டா மாறுதல் விண்ணப்பங்களின் நிலைகளை சரிபார்த்தபோது, அதில லாடனேந்தல் குரூப் சர்வே எண்.5A1-ல் 5A1B என சர்வேயரால் உட்பிரிவு செய்து எனது பெயருக்கு பட்டா எண்.2813 வழங்கப்பட்டிருந்தது. ஏனைய சர்வே எண்கள்.35/5A2, 35/5A3 மற்றும் 35/5A4 ஆகியவற்றிற்கான பட்டா மாறுதல் நிராகரிக்கப்பட்டிருந்தது. அதேபோல லாடனேந்தல் குரூப் சர்வே எண்.35/3A3ல் உள்ள புன்செய் இடத்திற்கான பட்டா மாறுதல் விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பாக கடந்த 29.09.2026ம் தேதி மதியம் சுமார் 1 மணியளவில் லாடனேந்தல் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த வி.ஏ.ஓ திருமதி.சுந்தரி என்பவரை சந்தித்து, எனது பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளது சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் தொடர்பு ஆவணங்கள் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னார். நான் அனைத்து ஆவணங்களையும் தலையாரியிடம் ஏற்கனவே கொடுத்துள்ளதாக சொன்னேன். அதற்கு VAO சுந்தரி அவர்கள், "டாக்குமெண்ட்கள் கொடுத்தா மட்டும் போதுமா, கொடுக்க வேண்டியதையும் கொடுக்கணும்ல" என்று சொன்னார். நான் அவரிடம் "என்ன அக்கா கொடுக்கணும்" என்று கேட்டேன். அதற்கு அவர், "பட்டா மாறுதலுக்கு ரூ.5,000/- கொடுப்பா, மறுபடியும் நாளைக்கே அப்ளை பண்ணு, நான் உனக்கு, எல்லா சர்வே நம்பருக்கும் பட்டா கிடைக்க ரெகமெண்ட் பண்ணி ஏற்பாடு செய்கிறேன்" என்று சொன்னார். அதற்கு நான் VAO-விடம், கொஞ்சம் குறைச்சுக்கலாம்ல அக்கா, என்று சொன்னேன், அதற்கு VAO, "எல்லாரிடமும் ரூ.7,000/- வாங்குவேன், உனக்குத்தான் குறைச்சு ரூ.5000/- கேட்டிருக்கிறேன், இதுக்கு மேல குறைக்க முடியாது" என்று கூறிவிட்டார். பின்னர், VAO சொன்னபடி நான், நேற்று 30.09.2026ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் திருப்புவனம் தாலுகா ஆபிசில் உள்ள E-சேவை மையத்திற்கு சென்று பட்டா மாறுதலுக்கு விண்ணப்பித்துக்கொண்டிருக்கும்போது, லாடனேந்தல் வி.ஏ.ஓ திருமதி.சுந்தரி அங்கு வந்து, என்னிடம், "என்னப்பா பட்டா மாறுதலுக்கு அப்ளை பண்றியா" என்று கேட்டார். நான் அவரிடம், "ஆமாம் அக்கா" என்று சொன்னேன். அதற்கு அவர், "சரி அப்ளை பண்ணிட்டு என்னையை வந்து பார்த்துவிட்டு போ" என்று சொன்னார். நான் மேற்படி E-சேவை மையத்தில் லாடனேந்தல் குரூப் சர்வே எண்.35/3A3, 35/5A2, 35/5A3 மற்றும் 35/5A4 ஆகியவற்றிற்கு பட்டா மாறுதல் செய்ய விண்ணப்பித்தேன். அதற்கான விண்ணப்ப எண்.2026/0103/23/029961 ஆகும். அதன்பின்னர், தாலுகா ஆபிசில் இருந்த வி.ஏ.ஓ திருமதி.சுந்தரியை சந்தித்து, பட்டா மாறுதலுக்கு விண்ணப்பித்துவிட்டதாக தெரிவித்தேன். அப்போது, அவர் எனது பட்டா மாறுதல் சம்மந்தமான பத்திர நகல்களை கேட்டு

வாங்கிக்கொண்டார். அப்போது அவர் என்னிடம், "இன்னைக்கு நான் வாவியரேந்தல் கோவில் திருவிழாவுக்கு போறேன், நாளைக்கு காலைல என்னுடைய லாடனேந்தல் வி.ஏ.ஓ ஆபிஸிற்கு வந்து, நான் கேட்ட பணம் ரூ.5000/-த்தை கொடுத்திடு, அப்பதான் பட்டா மாறுதலுக்கு ஏற்பாடு பண்ண முடியும்" என்று சொன்னார். நான் சரி என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுத்து பட்டா மாறுதல் வாங்க விருப்பம் இல்லை. எனவே, பட்டா மாறுதலுக்கு பரிந்துரை செய்ய என்னிடம் ரூ.5,000/- லஞ்சம் கேட்ட லாடனேந்தல் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.சுந்தரி என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd/-xxxxx. இணைப்பு :- 1) திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1374/2006-ன் நகல், 2) திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.576/2009-ன் நகல், 3) திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3077/2009-ன் நகல், 4) திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.5489/2026-ன் நகல், 5) திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.5490/2026-ன் நகல், 6) பட்டா மாறுதலுக்கான ஒப்புகை சீட்டு எண்.TNIGRS/2026/Rural/ 53744348/08092026185517-ன் நகல், 7) பட்டா மாறுதலுக்கான ஒப்புகை சீட்டு எண். TNIGRS/2026/Rural/ 53746088/08092026191949-ன் நகல், 8) திருப்புவனம் வட்டாட்சியர் அலுவலக பட்டா மாறுதல் உத்தரவு கோப்பு எண்.2026/0105/23/024716, நாள்:15.09.2026-ன்படி லாடனேந்தல் குரூப் சர்வே எண்.35/5A2, 35/5A3 மற்றும் 35/5A4 ஆகியவற்றிற்கான பட்டா மாறுதல் நிராகரிப்பு செய்யப்பட்டும், சர்வே எண்.35/5A1-க்கு உட்பிரிவு செய்து டி.ஆர்.2026/23/14/000584SD-ன்படி பட்டா மாறுதல் செய்தும் வழங்கப்பட்ட உத்தரவு நகல், 9) திருப்புவனம் வட்டாட்சியர் அலுவலக கோப்பு எண்.2026/0103/23/027174-ன்படி லாடனேந்தல் குரூப் சர்வே எண்.35/3A3-க்கான பட்டாமாறுதல் நிராகரிப்பு செய்யப்பட்டதற்கான உத்தரவின் நகல், 10) பட்டா மாறுதலுக்கான விண்ணப்பம் எண்.2026/0103/23/029961, நாள்:30.09.2026-ன் நகல்.

Sir, Received the complaint on 01.10.2026 at 08.30 hrs, genuineness of the complaint was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai, and registered a case in Sivagangai V&AC Crime.No.14/2026 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment)

Act 2018 on 01.10.2026 at 09.00 hrs and took up for investigation. sd.A.KANNAN, Inspector of Police, V&AC, Sivagangai.01/10/2026.

இந்த வழக்கின் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

A. Kannan
01/10/2026
Inspector of Police
Vigilance & Anti-Corruption
Sivagangai